" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2007ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 6-ம் நாள் திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடு உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

-------------

**திருக்குறள் : " அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை**
**வேண்டும் பிறன்கைப் பொருள் "**

**பொருள் :** தன் கைப்பொருள் சுருங்காது இருத்தலுக்கு வழியாது என்னவென்றால், பிறர் கைப்பொருளை கவரக்கூடாது என்று இருத்தலே ஆகும்.

**தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**
**<u>உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.
(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

**<u>இரங்கல் தீர்மானம்</u>**

**<u>மாமன்ற தீர்மானம் எண் :114</u>**

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து " தமிழ்ப் பணியாற்றியவர், மறைந்த முன்னாள் மாமன்ற உறுப்பினர் திரு. கருணைதாசன் அவர்கள் மறைவினால், இம்மாமன்றம் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளது. இவர் மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினராக இருந்தபோது மாமன்றத்தை சிறந்த முறையில் நடத்துவதற்கு உறுதுணையாக இருந்தார். மாநகராட்சிப் பள்ளிகளுக்குத் தமிழ்ப் புலவர்கள் பெயர் சூட்டியதில் திரு.கருணைதாசன் அவர்களுக்கு பெரும்பங்கு உண்டு. தமிழுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்ற தமிழ் உணர்வோடு "தமிழ் பாவை" என்ற இதழைத் தொடங்கி தமிழ்ப் பணியாற்றியவர். அன்னாரின் மறைவு மதுரை மக்களுக்கும், இம்மாமன்றத்திற்கும் பேரிழப்பாகும்.

இவரது பிரிவால் துயருரும் இவரது குடும்பத்தார் அனைவருக்கும் மதுரை மாநகராட்சி அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் சார்பிலும், துணை மேயர் சார்பிலும், என் சார்பிலும் இம்மாமன்றம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இரங்கல் தீர்மானம் வாசித்து முடித்தபின்பு அன்னாரின் மறைவிற்கு இரண்டு நிமிடம் நேரம் எழுந்து நின்று மௌன அஞ்சலி அனுசரிக்கப்பட்டது.

தொடர்ந்து இந்தியாவின் முதல் பெண் மேதகு குடியரசுத் தலைவராக பதவியேற்றுள்ள திருமதி. பிரதீபா பாட்டீல் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி தீர்மானம் மேயர் அவர்களால் வாசிக்கப்பட்டது

.

**<u>வாழ்த்துச் செய்தி தீர்மானம்</u>**
**<u>மாமன்ற தீர்மானம் எண் : 115</u>**

இந்தியாவின் முதல் பெண் மேதகு குடியரசுத் தலைவராக திருமதி. பிரதீபா பாட்டீல் அவர்கள் 25.7.2007-ல் பொறுப்பேற்றுள்ளார். இவர் பாராளுமன்ற உறுப்பினராக மாநில அமைச்சராக மாநில ஆளுநராக பணியாற்றியதோடு சிறந்த சமூக சேவகியாகவும் சிறப்புடன் பணியாற்றி இன்று இந்தியாவின் மேதகு குடியரசுத் தலைவராக பொறுப்பேற்றுள்ளார்.

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவராக ஒரு பெண் பொறுப்பேற்றுள்ளது நமக்கெல்லாம் பெருமையாக உள்ளது. இந்தியாவின் 13வது குடியரசுத் தலைவர் திருமதி. பிரதீபா பாட்டீல் அவர்களுக்கு மதுரை மாநகர மக்களின் சார்பிலும் மாமன்ற உறுப்பினர்கள் சார்பிலும், துணை மேயர் சார்பிலும், என் சார்பிலும் இம்மாமன்றம் வாழ்த்துக்களையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

**1) Jn.S1/32922 / 2006**

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மதுரை மாநகரில் உள்ள 208 குடிசைப் பகுதிகளை மேம்பாடு செய்ய நகர மேம்பாடு திட்டத்தில் (CDP) திட்டம் தயார் செய்து மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்கண்ட குடிசைப் பகுதிகளை 7 ஆண்டுகளில் முழுமையாக நிறைவேற்றி முடிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக பகுதி - I ல் 21 குடிசைப் பகுதிகளை அபிவிருத்தி செய்ய ரூ. 26.84 கோடிக்கும் பகுதி - II ல் 58 குடிசைப் பகுதிகளை அபிவிருத்தி செய்ய ரூ. 103.58 கோடிக்கும் மத்திய மற்றும் மாநில அரசு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் Roc. No. 29323/2007/IHSDP 2, நாள். 25.06.07 ம் தேதிய சுற்றறிக்கையின் படி தேர்வு செய்யப்படும் குடிசைப் பகுதிகளையும் அதில் பயன்பெறும் பயனாளிகள் பட்டியலையும் மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று நிறைவேற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் முதற்கட்டமாக 25 குடிசைப்பகுதிகளில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட குடிசைப் பகுதிகளில் உள்ள கூரை வீடுகள் / ஓட்டு வீடுகள் / ஆஸ்பெஸ்டாஸ் உஷீட் வீடுகள் ஆகியவற்றை முழுமையாக அகற்றி புதியதாக 25.40 சதுர மீட்டரில் (273 சதுர அடியில் / ஆர்.சி.சி. கூரை) அமைந்த கட்டிடம் ரூ. 92,000/- மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் 50% மத்திய அரசு மானியமும் 20% மாநில அரசு மானியமும் 30% பயனாளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் பங்களிப்பில் செயல்படுத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த சுமார் ரூ.19.32 கோடிக்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ரூ.19.32 கோடியில் 30% மாநகராட்சி பொது நிதியிலிருந்தோ அல்லது TUFIDCO நிறுவனத்தில் கடன் பெற்று நிறைவேற்றவும், கட்டிடம் கட்டுவதற்காகும் செலவுத் தொகையில் அரசு அனுமதிக்கப்பட்ட மானியத் தொகை போக மீதமுள்ள 30% பங்குத் தொகையை சம்பந்தப்பட்ட பயனாளிகள் செலவு செய்து கொள்ளவும், மேலும் ஒவ்வொரு குடிசைப் பகுதிகளில் நடைபெறும் பணிகளை கண்காணிக்க அந்தந்த குடிசைப் பகுதியிலுள்ள பயனாளிகள் பட்டியலிலிருந்து 10 நபர்களை தேர்வு செய்து ஒரு குழு அமைக்கவும், ஒவ்வொரு வார்டில் நடைபெறும் குடிசைப் பகுதிகளை கண்காணிக்க வார்டு அளவில் குழு அமைக்கவும், மண்டலத்தில் நடைபெறும் அனைத்து குடிசைப் பகுதிகளை கண்காணிக்க மண்டல அளவில் குழு அமைக்கவும் மேலும் குடிசைப் பகுதியில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் மாநகராட்சி செலவில் வழங்கவும் அதற்கான மாதாந்திர பராமரிப்பு கட்டணமாக பயனாளிகளிடமிருந்து ரூ.20/- குடிநீருக்கும் ரூ.20/- பாதாள சாக்கடை இணைப்பிற்கும் வசூல் செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் : 116**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

**மதுரை**
**நாள் : 3.8.2007**

* * * * *